பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 புரட்டாதி 6 ஜுல்-கஃ 11 இதழ் 224

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22 - 9 - 80

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY PERIODICALS DIVISION RECEIVED

வடமாநிலத்தில் முதன்மைபெற்றவர்கள்

இன்றைய மதியபோசனம் சுவையாக இருப்பதற்கு

அசோக்பவான்

112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 8095

## கார் விபத்து: மூவர் பலி!

சென்னை, செப். 21

இன்று காலையில் இங்கு நிகழ்ந்த கார் விபத்தில், 2 பெண்களும் ஒரு சிறுவனும் பலியானார்கள்.

பாதையை விட்டு விலகிய கார், கூவம்நதியில் விழுந்ததில் கார் நதியில் மூழ்கியது. பிரயாணம் செய்தவர்களில் மூவர் பலியானார்கள். இருவர் காயமடைந்தனர்.

# ஈரான்-ஈராக் பயங்கர யுத்தம்!

# 5 ஈரானிய கப்பல் மூழ்கடிப்பு!!

## தரையிலும் கடலிலும் சண்டை நீடிக்கிறது!

தெஹ்ரான், செப். 21

**ஈரான்–ஈராக் எல்லையில் பயங்கர யுத்தம் நடைபெறுவதாக, கடைசியாகக் கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.**

**நேற்று தரையிலும் கடலிலும் நிகழ்ந்த மும்முரமான சண்டையில், ஈரானுக்குச் சொந்தமான ஐந்து கடற்படைக் கப்பல்களை ஈராக் கடற்படையினர் வெற்றிகரமாக மூழ்கடித்தனர். அதேநேரத்தில் ஈராக்கின் இராணுவத்துறைமுகமொன்றை ஈரான் படைகள் சேதமாக்கியுள்ளது.**

கடந்த சில தினங்களாக நீடித்துவந்த ஈரான் - ஈராக் சண்டை நேற்று மோசமானதொரு கட்டத்தை அடைந்ததாக யுத்தமுனையிலிருந்து வெளிவரும் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின.

யுத்தம் கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் நேற்று நடைபெற்றது.

கடற்பகுதியில் நேற்று மூண்ட பயங்கர யுத்தத்தில் ஐந்து ஈரானிய கடற்படைக் கப்பல்களை ஈராக் கடற்படையினர் மூழ்கடித்தனர். அதே நேரத்தில் தரையில் நேற்று ஈரான் படைகள் வெற்றிபெற்றதாக செய்திகள் தெரிவித்தன.

ஈரானிய இராணுவ நிலையங்களைத் தாக்குவதில் ஈராக் படைகள் மும்முரமாக ஈடுபட்டபோதிலும், ஈராக்கின் ராணுவ துறைமுகமொன்றை ஈரான் படைகள் நாசமாக்கியது.

வளைகுடாவின் வடக்கு நதியில் நேற்று மும்முரமாக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

## புதிய பாராளுமன்ற கட்டடத்தின் நவரத்தின பிரதிஷ்டை வைபவம்

(கொழும்பு)

ஸ்ரீஜயவர்த்தனபுர புதிய பாராளுமன்ற கட்டடத்தின் 'நவரத்தின பிரதிஷ்டை' வைபவம் இன்று காலை சிறப்பாக நடைபெறுகிறது. இவ் வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்ளமாட்டார்.

ராஜாங்க அமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், சபாநாயகர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் திரு. அமிர்தலிங்கமும் இவ் வைபவத்தில் கௌரவவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

தனிப்பட்ட வசதியீனம் காரணமாகவே அவர் கலந்துகொள்ளமாட்டார் என்று கூறப்படுகிறது. (ம)

## பிரயாணியை அவமதித்தார்?

### பஸ் நடத்துநர்மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

பஸ் பிரயாணி ஒருவரிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டார் என்ற புகாரின் மீது பஸ் நடத்துநர் ஒருவர் மீது விசாரணை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் செல்வதற்காக திருநெல்வேலி பஸ் தரிப்பில் காத்திருந்த பெண் பிரயாணி ஒருவர், பலாலி வீதிவழியாக வந்த 787 இலக்க பஸ்ஸில்ஏறி பஸ் நடத்துநரிடம் தமது பிரயாணம்பற்றிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவி கமலம் கொலைவழக்கு:

## ஒப்புதல் வாக்குமூலம் பற்றிய நீதவான் அனுமதிகுறித்து 1ம் எதிரியிடம்கூறவில்லை

### உதவி இன்ஸ்பெக்டர் தொடர்ந்து சாட்சியம்

(புலோலி)

''யாழ் சிறைச்சாலையில் 1ம் எதிரியிடம் வாக்குமூலம் எடுப்பதற்கு முன்னர், 1ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வாக்குமூலத்தை அளிப்பதற்கு பருத்தித்துறை நீதவான் அனுமதியளித்தாரென 1ம் எதிரிக்கு நான் சொல்லவில்லை''

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில்தொடர்ந்து சாட்சியமளித்த காங்கேசன்துறை சப்இன்ஸ்பெக்டர் திரு. த. இரத்தினசபாபதி 2ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு.ஆர். ஸ்ரீசிவாயாவினல் குறுக்கு விசாரணை செய்யப்படும்போது தெரிவித்தார்.

இவ்வழக்கு பருத்தித்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

## முதன் முதலாக...

வார்ஸோ, செப். 21

போலந்தில் கடந்த முப்பத்து ஆறுவருடங்களில் இன்று முதற் தடவையாக, அரசாங்க வானொலியில், ஞாயிறு கிறிஸ்தவ ஆராதனை ஒலிபரப்பப்பட்டது!

போலந்து ஒரு கம்யூனிஸ்ட் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## இராமகிருஷ்ண மிஷன் பொன்விழா

(கொழும்பு)

இராமகிருஷ்ண மிஷன் பொன்விழா வைபவத்தின் இன்றைய இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிகள் சுவாமி சர்வஞானந்தா தலைமையில் நடைபெறும். நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இன்று இடம்பெறும். (ம)

தேவை

கட்டிட மேற்பார்வையாளர்

அனுபவமுள்ள கட்டிட மேற்பார்வையாளர்

(BUILDINGCONSTRUCTION SUPERVISOR)

உடனடியாகத் தேவை.

ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது.

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர், (கட்டிட மேற்பார்வை)

C/O ஈழநாடு — யாழ்ப்பாணம்

## ஒரிஸாவில் கோரவெள்ளம்

## 2 கோடிபேர் பாதிப்பு

## 1000 பேர் பலி!

புவனேஸ்வர், செப் 21

ஒரிஸாவில் ஏற்பட்ட கோர வெள்ளத்தினல், இரண்டு கோடி ஐம்பது லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வெள்ளத்தினல் இதுவரை, ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியானர்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரிஸா மாநிலம் முழுவதும் இருளில் மூழ்கியுள்ளது.

இதனிடையே, ஒரிஸா மாநிலத்திலுள்ள (இந்தியாவிலேயே பெரிய) பதினறுமைல் நீளஅணைக் கட்டில் உடைப்பு ஏற்படலாம் என்று அஞ்சப்படுவதால், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் அவசர அவசரமாக பத்திரமான

(8-ம் பக்கம் பார்க்க)

செப்டம்பர் 30-ந் திகதிவரை விஷேட சலுகை! முந்துங்கள்!! விலையில் மாற்றமில்லை!!!

மோட்டோஎஸ் மோட்டார் சைக்கிள்

மகாராஜா இன்வெஸ்மெண்ட் லிமிட்.

122, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வைத்தியம்

சகலவிதமான ரோகங்களுக்கும் விசேஷமாக முறிவு, பழம் நோக்களுக்கும் சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் செ. சிவநேசன், நாயன்மார்காடு ஆயுர்வேத வைத்தியசாலை, நவீன சந்தைக்கு முன்பாக, 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6569

### தேவை

தெல்லிப்பழைக்குஅருகாமையில்அல்லதுயாழ்.மாநகரசபை எல்லைக்குள், காணி அல்லது வீட்டுடன் கூடிய காணி தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 6899, C|o ஈழநாடு, யாழ்ப்பாணம். 6899

யாழ் நகரில் நன்கு இயங்கும் சப்பாத்து, உபகரணங்கள், தோல், றெச்சின் விற்பனை செய்யும் ஸ்தாபனத்துக்கு விற்பனவு உதவியாளர் தேவை. வியாபார அனுபவமும் இளவயதும் கவனிக்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 6849, C|o ஈழநாடு, யாழ்ப்பாணம். 6849

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பளை காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பெண் அன்னம்மாவின் மரண சாதன மரணச் சொத்து பற்றியவிடயம். காலஞ்சென்றவர்

வழக்கு இல: தத்துவம் 67

விஞயர் நல்லையா

தெல்லிப்பழை] மனுதார்

மேற்படி வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப் பட்டுள்ளதெனவும், 1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ந் திகதி அதற்கிணங்க முதலிலேஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும், இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**மூ. நல்லலிங்கம்,**
பதிவாளர்.

1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12 நாளன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்:
V: S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி. 6866

## உடுவில் மகளிர் கல்லூரி

## பிற்மன் பரீட்சை

இவ்வாண்டுசெப்டெம்பர் மாதத்திலிருந்து, உடுவில் மகளிர் கல்லூரி லண்டன் பிற்மன் பரீட்சையை நடாத்துவதற்குரிய நிலையமாகப் பதியப்பட்டுள்ளது.

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்குப் பதிவியல், வர்த்தக ஆங்கிலம் ஆகியவற்றிற்கான புதிய தவணை 1-10-1980 இல் ஆரம்பமாகும். பிரவேசப் படிவங்கள், மற்றும் விபரங்களுக்கும் பாடசாலைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

6397

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கிறவல் (மக்கி) விநியோகத்திற்கான அறிவித்தல்

யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக்குள் கிறவல் (மக்கி) விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

கூறுவிலை விகிதங்கள் கியூபிக் மீட்டருக்கானதாக இருத்தல் வேண்டும். 2-10-80 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்குமுத்திரையிடப்பட்டு "கிறவல் விநியோகக் கூறுவிலை" எனக் குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**க. சிவஞானம்**
ஆணையாளர்
யாழ் மாநகராட்சி மன்றம்.
மராமத்துப்பகுதி
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம். 18-9-80.
6895

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற தொண்டமனுறு விவேகானந்தன் மகள் விஜயலக்சுமியின் மரண சாதனமில்ல சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசொத்து )
நியாயாதிக்க )இல: 1098 T-

துரைசாமி விவேகானந்தன்-தொண்டமனுறு.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண-சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் நாளன்று முறபகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

**பதிவாளர்.**

வரைதல்
சி. நாகலிங்கமுதலி,
மனுதாரின் சட்டத்தரணி.
6893

## கப்பல் சேவை நிறுத்தப்படும்

(மன்னுர்)

தலைமன்னுர்- ராமேஸ்வரம் கப்பல் சேவை அக்டோபர் 16ம் திகதி முதல் நிறுத்தி வைக்கப்படுமென அறியப்படுகிறது.

காலநிலை காரணமாக நிறுத்தி வைக்கப்படும் இக்கப்பல் சேவை மீண்டும்அடுத்த வருடம் ஜனவரி 5ம் திகதி ஆரம்பிக்கப்படுமெனவும் அறியப்படுகிறது. (க)

## கல்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமப்பிரதேசம்

கீழ்க்காணும் (வேலைக்கு ரூபா 1000 - மற்பட்ட பதிவுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் 1-10-1980ம் திகதி காலை 10-00 மணிவரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10 - (பத்து) அறவிடப்படும். கேள்விப்பணம் ரூபா 25 - (இருபத்தி ஐந்து) கட்டியதன் பேரில் கிராமாட்சி மன்ற அலுவலகத்தில் உத்தியோகபூர்வமான கேள்விப் பத்திரம் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 29-9 1980ம் திகதி நண்பகல் 12-00 மணிச்கு முன்பாகபெற்றுக் கொள்ளவேண்டும்.

கேள்விப்பத்திரப்பிரதி ஒன்று எமக்கு கிடைக்கும் அதே நேரத்தில் முல்லைத்தீவு பிராந்திய உதவி ஆணையாளர்க்கு கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். கடிதங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் யாவும் பனங்காமம் கிராமப்பிரதேச விசேட ஆணையாளர் அலுவலகத்திலும் முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

### வேலையின் விபரம்

வவுனிக்குளம் மத்திய துருசிலிருந்து பாலையடி ஊடாக வவுனிக்குளம் சந்திவரையுள்ள ரோட்டு.

(ஒப்பம்)
**க. சுலேந்திரா,**
விசேட ஆணையாளர்,
பனங்காமம்கிராமப்பிரதேசம்.

பனங்காமம்
கிராமாட்சிமன்ற விசேட
ஆணையாளர் அலுவலகம்,
பாண்டியன்குளம்,
வவுனிக்குளம்,
18-9-19 0.
6394

## தாழ் நிலப்பிரதேச அபிவிருத்திச்சபை

## கேள்வி விண்ணப்பம்

நாவாந்துறையிலுள்ள வேலைத்தலத்திற்கு கீழ்க்காணும் பொருட்கள் விநியோகிப்பதற்கான விண்ணப்பங்கள் கேள்விமூலம் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | காட்டுத்தடிகள் | 70 - 9 அங்குல சுற்றளவு 11 அடி உயரம் |
| (2) | ,, | 30 - 9 அங்குல சுற்றளவு 14 அடி உயரம் |
| (3) | ,, | 1400 - 4அங்குல சுற்றளவு 15 அடி உயரம் |
| (4) | 6000 சோடி தென்னங் கிடுகுகள் | |

அரக்கு முத்திரையிடப்பட்ட தபால் உறையில் பதிவுத்தபால் மூலம் "தலைவர், [illegible] (L. I. A) தாழ்நிலப் பிரதேச அபிவிருத்திச்சபை, இல. 4, 22 [illegible] சத்திற்கு 26-9-1980 திகதி பிற்பகல் 2-00 மணிக்கு முன்னர் அனுப்பவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "காட்டுத்தடிகள் விநியோகம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பிரதேசப் பொறியியலாளர்.

21-9-80

6903

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் காவலுடன் மாதிரிக்கிராமம்

### உடுப்பிட்டி எம். பி. கவலை

(உடுப்பிட்டி)

"இலங்கையில் பொலிஸ் காவல் மத்தியில் நிறுவப்பட்ட மாதிரிக் கிராமம் என்றால் அது கன்பொல்லை மாதிரிக் கிராமமேயாகும். இது எனக்கு மிகுந்த வேதனையையும், வெட்கத்தையும் அளிக்கின்றது"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் கரவெட்டி கன்பொல்லை ஸ்ரீநாரத வித்தியாலயத்தில் நடைபெற்ற இராஜ கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டி எம். பி. திரு. இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இப்பாரிய மாதிரிக் கிராமத்தில் 390வீடுகளைக்கொண்ட வீடமைப்புத்திட்டம் உருவாக்கப்பட்டுவருகின்றது. இவ் வீடமைப்புத் திட்டத்தின் முதற் கட்டமாக 100 வீடுகளை உருவாக்கத் திட்டமிட்ட போதிலும் 85 வீடுகளே பூர்த்தி அடைந்துள்ளன. இரண்டாவது, மூன்றுவது வீடமைப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்ட பின்னர் எல்லோருக்கும் வீடுகள்கிடைக்கும். ஆதலால் தங்களுக்கு வீடு கிடைக்கவில்லையே என்று ஒருவரும் கவலை கொள்ளத் தேவையில்லை.

"கன்பொல்லை மாதிரிக் கிராமத் திட்டத்தை முறியடிக்கப் பல்வேறு சக்திகள் எமக்குள்ளே பிளவுகளை ஏற்படுத்த முயல்கின்றன. இதற்கு ஒருபோதும் இக்கிராம மக்கள் இடம்கொடுக்கக்கூடாது"

## பதவி நீக்கம்

(புளியங்குளம்)

முத்தையன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது நெறியாளர் குழுவுறுப்பினரான திரு. த. மகாலிங்கம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியதனுல் அவர் பதவி நீக்கம்செய்யப்பட்டார். (க)

## புத்தக வெளியீடு

(அரியாலை)

பரந்தன் நவஜீவன அபிபரும், சிறந்த கிறிஸ்தவ பிரசங்கியுமான அருட்திரு எ. சி. தம்பிராசா அடிகளாரால் எழுதப்பட்ட சிறுவர்களுக்கான வைவழிபாட்டு புத்தக வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பலர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். (ஈ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற காரைநகர் மேற்கு வே. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

வே. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லாச்சி நட்டுப்பாளி, கோவளம், காரைநகர் மேற்கு.

மனுதார்

உரிமைத்தத்துவம் )
நியாயாதிக்கம் )இல: 23

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1980ம் ஆண்டு ஐப்பசிமாதம் 9 ஆந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**தா. குலஞானம்,**
பதிவாளர்.

1980-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 4ஆ நாளாகியஇன்று தேதியிடப்பட்டது. 6856

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர்



சாவகச்சேரி மகளிர் வித்தியாலயத்தின் புதிய அதிபராக திருமதி குணேஸ்வரி பரராஜசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 15 ஆண்டுகளாக கண்டி உயர்தரபெண்கள் பாடசாலையில் உதவி ஆசிரியையாகவும், பின் பேராதனைப் பல்கலைக்சழக கல்விப் பீடத்தில் தற்காலிக விரிவுரையாளராகவும் கடமையாற்றினர்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழக கல்வி பீடம் நடாத்திய டிப்புளோமா பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றதுடன் இலங்கைப் பல்கலைக்கழக எம். ஏ. பட்டமும் பெற்றுர். கடந்த வருடம் புலமைப் பரிசில் பெற்று பதுடில்லி பல்கலைக்கழகம் சென்று அங்கு பயிற்சி பெற்றபின் பல்கலைக்சழகத்தினரால் நடாத்தப்பட்ட இறுதிப்பரீட்சையில் திறமைச் சித்தியடைந்து பட்டம் பெற்றுள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லப்பா, திருமதி செல்லப்பாவின் சிரேஷ்ட புதல்வியான இவர் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவருமாவார். (க)

## விளையாட்டு விழா

(மன்னுர்)

விளையாட்டு அமைச்சினுல் நடத்தப்படும் தேசிய விளையாட்டு விழா தொடர்பான விளையாட்டுப் போட்டிகள் மன்னுரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் விளையாட்டு அதிகாரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, மன்னுர் என்ற முகவரிக்கு இம்மாதம் 25ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (கு)

**மணிவாக்கு**

காற்று எத்திசையில் அடித்தாலும் அது மலையை அசைப்பதில்லை. மனதை மலைபோன்று அசையாது வைத்திரு.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## நவீன பாராளுமன்றம்

எங்கள் ஈழநாட்டுக்கும் எமது 'ஈழநாட்டுக்கும்' இன்று ஒரு சுபதினம். நாட்டின் புதிய பாராளுமன்ற நவரத்தின பிரதிஷ்டா வைபவம் கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தன புரத்தில் இன்று நடைபெறுகிறது. இதனைப்போல எங்கள் பத்திரிகையும் சிறிய அளவில் புது எழுத்துக்களால் பொலிவுற்று வெளிவருகின்றது.

பாராளுமன்றமும் புதினப் பத்திரிகையும் நாட்டின் ஜனநாயக ஆட்சியின் காவல் நாய்கள் என்று சொல்வது வழக்கம். அந்த உண்மையை எவரும் ஆட்சேபிக்கத் துணியார். ஆயினும் எந்த அளவுக்கு ஜனநாயகக் கோட்பாடு இவ்விரு சாதனங்களிலும் தொழிற்படுகின்றது என்பது சர்ச்சைக்குரிய விடயம்.

பத்திரிகைக்குத் தணிக்கை அடிக்கடி ஏற்படுவதும் பாராளுமன்றப் பெரும்பான்மை வாக்குடன் அவசர காலச்சட்டம் அமுலாவதும் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் நாம் கண்ட அனுபவம். குறிப்பாகக் கூறின் தனிச்சிங்களச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியகாலம் தொட்டு அவசரகால ஆட்சி, இனக்கலவரம், சமூகப் பிணக்கு பொருளாதார வரட்சி போன்றபல நீமையான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதைநாம் பார்த்து வருகிறோம்.

பழைய பாராளுமன்றம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நாற்பத்தொன்பது பிரதிநிதிகளுக்கெனக் கட்டப்பட்டு காலத்துக்குக் காலம் விஸ்தரிக்கப்பட்டு, 168 பேருக்கு இடவசதி உடையதாகச் சீரமைக்கப்பட்டது. சட்ட நிருபண சபை என்ற பெயரில் தொடங்கி அரசாங்கசபை, மக்கள் பிரதிநிதிகள் சபை தேசிய அரசுப் பேரவை என்றில் பாராளுமன்றமென்ற இன்றைய அமைப்பில் இன்று ஆட்சி புரிகின்றது

பெயர் மாற்றங்களுக்கேற்ப பொருள் மாற்றம் காணப்படுகின்றதா என்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் ஆராயக் கடமைப்பட்டுள்ளோம். மக்கள் வாக்குரிமை பெற்றும் வருகிற வருடம் 50 ஆண்டு காலம் பூர்த்தியாகின்றது.

இந்த அரை நூற்றாண்டு காலத்தில், சிறப்பாக சுதந்திரத்துக்குப் பின் மக்கள் ஆட்சி வலுப்பெற்றிருக்கிறதா? சாதாரண மனிதன் வயிற்றுப் போராட்டத்திற்கு ஆளாகிய நிலையில் இதனை எண்ணிப்பார்க்க நேரம் ஏது? வாக்குரிமை இருந்தபோதும் மக்களுக்கு முன்னேற்றத்தைப் பற்றிக் கவலை இல்லை.

எனவே எழுநூறு வருடவயது கொண்ட கோட்டே தலைநகரில் உருவாகும் எழு மாடிகளைக்கொண்ட இருநூறு பிரதிநிதிகளுக்கு வசதியான புதிய கட்டிடம் மக்கள் ஆட்சியில் ஒருபுதிய சகாப்தத்தை ஏற்படுத்துமா?

'ஆம்' என்று சொல்ல அவ்வளவு ஆசையோ 'இல்லை' என்ற அச்சமே அவ்வளவுக்கு மேலிடம் பெறுகிறது.

குடியாட்சி முறையில் உள்ள குறை இதுதான். மக்களுக்காக மக்களால் நடைபெறும் மக்களாட்சியே குடியாட்சி என்பது இயலாத ஒன்று. பொதுமக்கள் தீவிரபங்கெடுத்து நடாத்தும் ஆட்சியை நாம் இதுவரையும் கண்டதில்லை.

பொதுமக்களை முறியடித்து, அவர்களின் வாக்கை அபகரித்து, ஆட்சியின் பொறுப்பேற்று சிலர் நடத்தும் ஆட்சியைத் தாம் இதுகாறும் அனுபவித்து வந்தோம்.

இருநூறு பிரதிநிதிகள் புதிய பாராளுமன்றத்தில் இடம்பெற்றுவிட்டால் நாட்டை உருப்படியான முறையில் முன்னேற்றுவார்களா?

ஒவ்வொரு மனிதனும் உழைத்தால்தான், உணவு மட்டுமன்றி உயிர் வாழ்க்கை உண்டு என்று வற்புறுத்தும் அளவுக்கு எல்லோரையும் தொழில்செய்யுமாறு கட்டாயப்படுத்த வழிவகுக்க உதவுமானால் அது மக்களாட்சிதான்.

வாக்காளர்களிடம் கருத்தை மறைத்து தந்திரமாகப்பேசி கட்சித் தலைவருக்குப்பின் பாட்டுப்பாடுவதை இந்த ஐம்பதாவது ஆண்டு முடிவிலாவது கைவிட்டோமானால் புதிய பாராளுமன்றம் புதுப் பொலிவுக்குத் தகைமை பெறும்.

# புதிய பாராளுமன்றக் கட்டடத்திற்கு இன்று நவரத்தினகல் பதிக்கும் விழா

கோட்டேயின் ஸ்ரீ ஜயவர்த்தன புரத்தில் இலங்கையின் புதிய பாராளுமன்றம் அமைகிறது.

இன்று அந்தப் பாராளுமன்றக் கட்டடத்தின் 'நவரத்தின பிரதிஷ்டை வைபவம் நடைபெறுகிறது.

சென்ற புதன்கிழமையே ஆரம்பித்துவிட்ட மதக் கிரியைகள் பாரம்பரிய சம்பிரதாயங்களை எல்லாம் உணர்த்த காலை 10-40 மணிச் சுபவேளையில் அங்கு நவரத்தினப் பிரதிஷ்டை நடைபெறுகிறது.

சித்திர வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளிப் பேழையில் நவரத்தின மணிகளோடு 1930ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையிலான இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களின் பிரதிகளும் கூடவே அப்பேழையில் வைக்கப்படும்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தில் புதிதாக நிருமாணிக்கப்படும் புதிய பாராளுமன்றம் பௌத்த பண்பாட்டு ரீதியிலேயே வடிவமைக்கப்படுகிறது.

ஏழு மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தின் 5 மாடிகள் மட்டுமே வெளிப்பார்வைக்குத் தோற்றமளிக்கும். நீர்த்தாங்கிகள், மின்தூக்கி இயந்திராதிகளைக் கொண்ட மேல் இரு மாடிகளும் கூரைப் பகுதியில் மறைந்திருக்கும்.

இலங்கையின் புதிய அரசியலமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 200 ஆகவே இருக்கமுடியும். அதற்கமைவாக நிருமாணிக்கப்படும் புதிய பாராளுமன்றமும் 200 ஆசனங்களைக் கொண்டதாக இருக்கும். கட்டடத்தின் 2ம் மாடியில் இந்தப் பாராளுமன்றச் சபை அமையும்.

பொதுமக்கள் கலரி 600 ஆசனங்களையும், பிரமுகர்கள் கலரி 120 ஆசனங்களையும், பத்திரிகையாளர் கலரி 55 ஆசனங்களையும் கொண்டிருக்கும்.

கட்டடத்தின் கூரை தேக்கு, அஸ்பால்ற், செப்பு ஆகியவற்றால் முப்படைகளாக அமைக்கப்படும். இதற்குச் சுமார் 100 தொன் செப்பு செலவாகுமாம். இம்மரபு ஜப்பான் நாட்டினதாகும்.

சுமார் 60 கோடி ரூபா செலவில் உத்தேசிக்கப்பட்டுள்ள இக்கட்டடத்தை கொழும்பு எட்வேட்ஸ் ரீட் அன் பெக் கட்டடப் பொறியியல் நிபுணர்கள் வடிவமைக்க, ஜப்பான் நிறுவனமொன்று ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளது.

மூன்றிலொருபங்கு வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாகிவிட்ட இக்கட்டடம், பூர்த்தியாக்கப்பட்டு 1981 டிசம்பர் 10ந் தேதி அரசிடம் கையளிக்கப்படுமென்று ஜப்பானிய நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜயவர்த்தனபுர பாராளுமன்றம், இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ந் தேதி, 1982ம் ஆண்டில் திறந்துவைக்கப்படும்.

கோட்டே தொகுதி உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான திரு. ஆனந்ததிஸ்ஸ த அல்விஸ், புதிய பாராளுமன்றக் கட்டடத்தின் 'நவரத்தினப் பிரதிஷ்டை' வைபவம் தொடர்பாக நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இப்பாராளுமன்றக் கட்டடம் தொடர்பாகக் 'கட்டப்படும் கதைகள்' பற்றி விளக்கம் அளித்தார்.

நேற்று இரவு முழுவதும் பிரித் ஓதப்பட்டு, காலையிலும் பௌத்த மத அனுஷ்டானங்களுடன் நடைபெறும் இன்றைய வைபவத்தில் இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ த அல்விஸ், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார், பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, திருமதி பிரேமதாச, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திருமதி ஜயவர்த்தன ஆகியோர் கௌரவ விருந்தினராவர்.

--மாலி

## "கடவுள் கைவிடமாட்டார்"

(அரியாலை)

"உலகப் பொருள்களில் நாம் கொண்டிருக்கும் அளப்பரிய பற்றுதலினால் நாம் கடவுளை அடைய முடியாமலிருக்கிறது. கடவுள் எம்மைக் கைவிடமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு இன்று அவசியமாகிறது."

இவ்வாறு யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அருளுரை நிகழ்த்துகையில் 'சிலர் வணக்க முறையில் நடுவு நிலைமையைக் கைக்கொள்ளுகிறார்கள்; இந்த நிலைமை எம்மை இரட்சிக்கமாட்டாது, நல்வழியையும் காட்டாது" என்றார்.

(ஈ)

## மூடுவிழா அல்ல!

"17-09-80 ல் "ஈழநாடு" பத்திரிகையில் 'மூடுவிழா' என்ற தலைப்பின்கீழ் ஒட்டிசுட்டானில் புதிதாக நிறுவப்பட்டுள்ள விற்பனை அபிவிருத்தி கொள்வனவு நிலையம் தற்பொழுது மூடப்பட்டுள்ளது" என்ற செய்தியைப் பார்த்தேன். இது முற்றிலும் உண்மைக்கு மாறான தகவலாகும்.

கொள்வனவு நிலையம் 9-03-80 ல் கௌரவ வர்த்தக கப்பல்துறை அமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு இற்றைவரை (லீவு நாட்களைத் தவிர) எக்காரணத்தைக் கொண்டும் 'மூடுவிழா' செய்யப்படவில்லை. அத்துடன் இக்கால எல்லைக்குள் 15 லொறிக்கு மேற்பட்ட தொகை பிடி வெங்காயத்தை கொள்வனவு செய்துள்ளோம் (இக்கிளை மூலம்).

(முகாமையாளர்)

மா. சிற்றம்பலம்
பொறுப்பதிகாரி,
விற்பனைத் திணைக்களம்,
ஒட்டிசுட்டான்.

## இன்று ஊரெழு மீனாட்சி அம்பாள் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

ஊரெழு கிராமத்தின் மேற்குப் பகுதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணகை அம்மன் என வழங்கிவரும் அருள்மிகு மீனாட்சி அம்பாளுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரதேரின் வெள்ளோட்ட விழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

1922ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட மீனாட்சி அம்பாள் ஆலயம் காலத்திற்குக் காலம் பலவகையிலும் வளர்ச்சியும் சிறப்பும் பெற்று வருவது அம்பாள் திருவருள் என்றுதான் சொல்லவேண்டும். இந்த ஆலயத்தின் ஸ்தாபகரும் பிரதம அர்ச்சகருமாகிய சிவஸ்ரீ அ. ச. துரைசாமி ஐயர் ஆலயத்தின் சிறப்பான வளர்ச்சியில் பெரிதும் அக்கறைகாட்டி வந்தார். 1957ம் ஆண்டில் அவர் காலமாகியதைத் தொடர்ந்து அவரதுமருமகனாகிய சிவஸ்ரீ. மு. கிருஷ்ணசாமிக்குருக்கள் ஆலயத்தின் நிர்வாகப்பொறுப்பையும், பூசை உரிமையையும் ஏற்றுக்கொண்டு சிறப்பாகவும், திறமையாகவும்செய வருலாற்றிவதை ஆலயத்தின் வளர்ச்சிலிருதந்கோணக் கூடியதாகஇருக்கிறது.

இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே நடைபெற்று வந்த அலங்கார உற்சவத்திற்குப் பதிலாக 1974ம் ஆண்டிலிருந்து கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பனவற்றை உள்ளடக்கிய மகோற்சவம் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் மீனாட்சி அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளுவதற்குச் சித்திர தேரொன்று அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்பு அம்பாள் அடியார்களுக்கு ஏற்பட்டது. சில கால இடைவெளிக்குப் பின் அம்பாள் திருவருள் கைகூடியதால் 1974 ஒகஸ்ட் 24ம் திகதி சுபவேளையில் நடைபெற்ற ஆரம்பநாள் வேலையுடன் தேரொன்றை உருவாக்கும் பணி தொடங்கியது. மயிலிட்டி வடக்கு சரவணன் கவின் கலையகத்தின் பிரதம ஸ்தபதியார்திரு.சரவணமுத்து ஜெயராசா தலைமையிலான கலைஞர்கள் இரவு பகலாக இதற்கான வேலைகளில் ஈடுபட்டு தமது கைவண்ணத்தினால் அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுகிறது. நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் இரதோற்சவத்தின் போது மீனாட்சி அம்பாள் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து எழுந்தருளவார்.

— அ. கனகசூரியர்

## "சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை நீக்குக" விவசாயவிஸ்தரிப்பு சேவையாளர் கோரிக்கை

(புலோலி)

"சிங்கள மொழியில் சித்தியடையவில்லை என்ற ஒரே காரணத்திற்காக வருடாந்தச் சம்பள உயர்வுகள் கொடுக்கப்படாததும், பதவியில் உறுதிப்படுத்தப்படாததும் தமிழ் விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களின் துரதிஷ்டமாகும், இவர்களின் பதவியை உறுதிப்படுத்திச் சம்பள உயர்வை வழங்குவதுடன், இருபது வருடங்களுக்குமேல் சேவை செய்பவர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்யவேண்டும்."

இவ்வாறு வடமாகாண விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் சங்கம் தனது 6 வது வருடாந்த மகாநாட்டை முன்னிட்டு அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு இம்மாதம் 27 ம் திகதி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஜே. மரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இம்மகாநாட்டிலே எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ்த் தொழிற் சங்கக் கூட்டணித் தலைவரும், ஊர்காவற்றுறை எம். பி.யுமான திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

"விவசாய விஸ்தரிப்பு ஊழியர்கள் பலர் இருபது வருடங்களுக்குமேலாகச் சேவையாற்றியும் சிங்கள மொழித் தேர்ச்சி இன்மையால் பாதிக்கப்பட்டு வேலையிழந்துள்ளனர். இன்று அவர்கள் வேறு தொழில்கள் ஏதும் இன்றி வாழ்க்கை நடாத்த முடியாது மிகவும் கஷ்டம் அனுபவித்து வருகின்றனர். எமது தார்மீக அரசு இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கி, விமோசனம் அளிக்கவேண்டும்" என்ற தீர்மானம் உட்பட வேறு பல தீர்மானங்களும் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்படும்.

(அ)

## நடமாடும் மீன் விற்பனை நிலையம்

(புளியங்குளம்)

முல்லைத்தீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினர் நடமாடும் மீன் விற்பனை நிலையத்தின் மூலமாக மீன் தட்டுப்பாடான முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளுக்கு லொறி மூலம் எடுத்துச் சென்று விற்பனை செய்யவுள்ளனர்.

(ந)

## பௌர்ணமிக் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சிமன்றம், அரியாலை சுகிதா விநோதா கலையக ஆதரவுடன் நடத்தும் பௌர்ணமிக் கலைவிழா, யாழ். திறந்தவெளியரங்கில் நாளை மாலை நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தமிழ்ஈழம் அபிவிருத்திசபை இரண்டிற்கும் தொடர்பில்லை’

## வன்னியர் நினைவுவிழாவில் நல்லூர் ‘சிவா’

(கோண்டாவில்)

தமிழ் ஈழத்திற்கும் மாவட்ட அபிவிருத்தி சபைக்கும் இடையில் எத்தகைய தொடர்பும் இல்லை. 1977ம் ஆண்டு மக்கள் இட்ட கட்டளைப் பிரகாரம், தமிழர் விடுதலைக் கூட்டணி இருக்கும் மட்டும் தமிழ் ஈழம் பெறுவதற்காக எத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டுமோ, அத்தகையமுயற்சிகளில் ஈடுபடுவோம்.

கோண்டாவிலில் நடந்த அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. கனகலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

மாவட்ட அபிவிருத்தி சபை தமிழ்ஈழக் கோரிக்கைக்கு மாற்றுமருந்து அல்ல. எமது பூமியை அபிவிருத்திசபை மூலம் பாதுகாக்கலாம் என்றமைக்காகவே மாவட்ட சபையை ஏற்கின்றோம்.

பண்டா—செல்வா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இன்று நாம் திருகோணமலை, வவனியா போன்ற பகுதிகளில் எமது நிலப் பகுதியை பறிகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது. இதே நேரத்தில் பிரதேச மொழியாகவும் இருந்திருக்க முடியும். ஆனல் எம்மிடையே அன்று இருந்த ஒற்றுமை இன்மை அதனைப் பாதித்து விட்டது. மீண்டும் மீண்டும் நான் ஒன்றைக் கூறிக்கொள்கின்றேன். பழைய நிலை மீண்டும் எமக்கு வரக்கூடாது என்பதை. இன்றைய சூழ்நிலையில் அமரர் வன்னியசிங்கம் எவ்வாறு நடப்பார் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

மாவட்ட சபையை தமிழரசுக் கட்சியினர் கேட்ட பொழுது அதற்கு எதிரா ஜி. ஜி.யை பேசவைத்து அதனையும் இவ்வாறு அன்றைய ஆட்சியாளர்கள் செய்தார்கள். இந்நிலையில் நாம் ஒற்றுமையாக ஒன்றுபட்டால் தான் சிங்கள ஆட்சியாளர்களும் சிங்களத் தலைவர்களும் எம்மை மதிப்பார்கள் என்ற நிலையில் நாம் ஒன்றுபட்டோம். இவ்வாறு நாம் பலம்வாய்ந்த முறையில் ஒன்றுபட்டமையும் கட்டுக்கோப்பும் தான் எமக்கு கடந்த தேர்தலில் வெற்றி ஈட்டித்தந்ததுடன் சிங்கள அரசியல் கட்சிகள் மதிப்பதும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது இன்றுமீண்டும்எம்மை பிரிப்பதற்கு சில தீய சக்திகள் முயற்சிசெய்துவருகின்றன. ஒற்றுமையைக் குலைப்பது சுலபம் தலைமைப்பீடத்தை தூக்கி எறியலாம், புதிய கட்சிகள் உருவாகலாம் இத்தகைய நிலைமைகள் உருவாகிய பின்னர் என்ன நடக்கும் என்பதைத் தான் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1949ம் ஆண்டின்பின் தமிழர் சுயாட்சிவேண்டும் என்று தமிழரசுக் கட்சி உருவாக்கிற்று இதனை தமிழ்மக்கள் மத்தியில் எவ்வளவுதூரம் ஏற்கச்செய்யமுடியுமோ அவ்வளவுக்கு வேண்டிய நடவடிக்கைகளை அமரர் வன்னியசிங்கம், தந்தை செல்வா ஆகியோர் செய்தார்கள்.

எமது இலட்சியத்தை எப்பொழுதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று சிங்களத் தலைவர்கள் பிரமுகர்கள் மத்தியிலேயே எடுத்துக் கூறியுள்ளோம். தமிழர் விடுதலைக் கூட்டணி தனது திட்டத்தை விட்டு விட்டது என்று கூறுவது உண்மையல்ல.

தம்பிமார் வரலாறு படிக்க வேண்டும். எமதுநாட்டில் மட்டும்தான் சுதந்திர இயக்கம் ஆரம்பிக்கவில்லை. இந்தியாவில் ஆங்கிலேயரினல் பிரதேச சுயாட்சி வழங்கப்பட்ட பொழுது தேசிய காங்கிரசுக்குள் இதுபற்றியசர்ச்சை எழுந்தது. ஆனல் மகாத்மாகாந்தி அதனை ஏற்ருர் அதற்காக அவர் இந்திய சுதந்திரத்தைக் கைவிட்டார் என்று கூறமுடியுமா? அல்லது நேரு, ராஜாஜி, காந்தி போன்றவர்கள் இனத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்றுதான் கூறமுடியுமா? இத்தகைஒருவரலாற்றை ஏன் நாம் பின்பற்றக்கூடாது என்று கூறுகின்றீர்கள். இதுதான் 1942ம் ஆண்டு ‘வெள்ளையனே வெளியேறு’ என்றுகூறுகின்ற அளவுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் வளர்ச்சி அடையக் காரணமாக இருந்தது. இன்று திருகோணமலை, வவனியா எமது கண்முன்னலேயே பறிபோகின்றது. எமது நிலம் பாரம்பரியத்தை பாதுகாக்கமுடியும் என்றல் ஏன் மாவட்ட அபிவிருத்திசபையை ஏற்கக்கூடாது. இதன் அடிப்படையில்தான் இன்று நாம் மாவட்ட அபிவிருத்திசபையை ஏற்று அணுகியுள்ளோம்.

இன்று மைத்திரிபால சேனநாயக்கா நாட்டைப்பிரிக்க மாவட்ட அபிவிருத்தி சபை வழிசெய்யும் என்று பிரசாரம் செய்கின்ருர். ஜே. ஆர். இது வெறும் மாவட்ட சபை என்று கூறுகின்ருர். இன்று நாம் எம்மைப்பற்றி விமர்சிப்பவர்களுக்கு எதிராக கூறப்புறப்பட்டால் மீண்டும் பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட நிலைமைதான் ஏற்படும். மக்களுக்கு நாம் இரண்டு வாக்குத்தருகின்ருேம். ஈழக்கோரிக்கையை கைவிடவில்லை என்பதையும் அடுத்த மாவட்ட அபிவிருத்திசபை பிரயோசனம் அற்றது என்பதைக்கண்டால் அதனை தூக்கிஎறிந்து விட்டு போராடுவோம் என்பதையும் கூறிக்கொள்கிருேம். இன்று மீண்டும் கூறுகின்ருேம்

## “மாவட்ட அபிவிருத்திச் சபைகளால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடையாது”

(கோண்டாவில்)

“மாவட்ட அபிவிருத்திச் சபையினல் தமிழருக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. தமிழ் ஈழக் கோரிக்கைக்கு என்றே எம் தலைவர்கள் மக்களிடம் வாக்குப் பெற்ருர்கள். மக்களிடையே உண்டாக்கிய சிந்தனையை வழிநடத்தவேண்டும். அதனை விட்டு நாம் பலவீனமான நிலையில் இருக்கிருேமென்று கூறி, அவர்களின் உணர்ச்சிகளை அடக்கக்கூடாது” என்று நல்லூரர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுக் கூட்டத்தில் பேசிய திரு. ஈழவேந்தன் குறிப்பிட்டார். டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

திரு. ஈழவேந்தன் மேலும்

தலைவர் மீதும் நம்பிக்கை வையுங்கள் என்றே நாம் கூறுகிருேம்.

திரு. ஏ. துரைராசசிங்கம், திரு. பெ. கனகசபாபதி திரு. குணநாயகம், திரு. சந்திரசேகரம், பண்டிதர் இராசையா, திரு. அருணசலம் ஆகியோரும் உரையாற்றினர். (க)

பேசியதாவது:

“முழு நேர ஊழியர்களின் மூலமே இனத்திற்கு விடுதலை காணமுடியும். கட்டுக்கோப்புடன் இயக்கம் இருக்க வேண்டும். தந்தை செல்வா கூறினர்; சிங்கள அரசு எம் மீது எதையும் திணிக்கட்டும். ஆனல் நாம் அதற்கு உடந்தையாக இருக்காதுவிட்டால் அதுவே போதுமானதாகுமென்று.

“இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாம் அரசுடன் எந்தவிதமான ஒப்பந்தங்களும் செய்யவில்லையென்றும், அரசு தன் எண்ணப்படியே மாவட்ட அபிவிருத்திச்சபையைத் தருகிறதென்றும் குறிப்பிடுகிருர்கள். அப்படியாயின் ஏன் பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பவற்றை முன்னெடுத்துக் காட்டி மேடைகளில் பேசி வருகிருர்கள். இது அவர்களிடையே ஒப்பந்தம் இருக்கின்றது என்பதைத்தானே காட்டுகின்றது.”

‘சுதந்திரன்’ ஆசிரியர் கோவை. மகேசன் பேசுகையில், “இன்று ஜே. ஆர்.

(6-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியியல்—1

# தமிழில் வேற்றுமை

உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள் பயன் பெறுவதற்கென 'அறிவியல் பூஞ்சோலை' என்ற இப் பகுதியை ஆரம்பிக்கிறோம். வாரத்தில் இரண்டுமுறை பிரதி திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் இப் பகுதிவெளிவரும்.

வேற்றுமை என்றால் என்ன என்பதற்கு இரண்டு வகையாக விடை அளிக்கலாம். பெயர்க்குத் தொடரியலிலுள்ள நிலைகளை வேறுபடுத்துவது அல்லது மாற்றுவது வேற்றுமை என்பது ஒரு விடை. தொடர்களில் பெயருக்கும் வினைக்கும் உள்ள இலக்கண உறவுகளை வேறுபடுத்திக்காட்டுவது வேற்றுமை என்பது மறுவிடை.

இவற்றை தமிழக மொழியியல் ஆய்வாளர் டாக்டர் பொன் கோதண்டராமன் அவர்கள் பின்வரும் உதாரணங்கள் மூலம் அழகாக விளக்கி காட்டுகிறார்.

முதலில் வேற்றுமை என்பது பெயர்க்குத் தொடரியலிலுள்ள நிலைகளை வேறுபடுத்துவது அல்லது மாற்றுவது என்பதை எடுத்து நோக்குவோம்.

01. கண்ணன் பார்த்தான்

02. கண்ணனைப் பார்த்தான்

முதலாவது தொடரில் கண்ணன் என்ற பெயர் எழுவாய் நிலையில் உள்ளது இந்தப் பெயரோடு ஐ உருபைச் சேர்த்தவுடன் இரண்டாவது தொடர் உருவாகிறது. ஆனால் கண்ணன் என்ற பெயர் இரண்டாவது தொடரில் செயப்படு பொருளாக மாறுபடுகிறது. அதாவது ஐ உருபு கண்ணன் என்ற பெயரை எழுவாய் நிலையிலிருந்து செயற்படு பொருள் நிலைக்கு மாற்றுகிறது இவ்வாறாக பெயர்க்குத் தொடரியலில் உள்ள நிலைகளை வேறுபடுத்தும் ஐ போன்ற உருவுகள் வேற்றுமை உருவுகள் எனப்படும். தமிழில் உள்ள உம் ஏ போன்ற சொற்கள் இப்படிப் பெயருக்குத் தொடரியலின் உள்ள உறவு நிலைகளை மாற்றுவதில்லை.

03. கண்ணன் வந்தான்

04. கண்ணனும் வந்தான்

05. கண்ணனே வந்தான்

இங்கு உம், ஏ போன்ற சொற்கள் பெயர்க்கு தொடரில் எவ்வகைநிலை மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனவே ஐ போன்ற உருபுகளுக்கும் உம், ஏ போன்ற சொற்களும் இடையில்உள்ள பேதத்தை நன்கு விளங்க முடியும்.

இனி இரண்டாவது வகையான வேற்றுமை வரைவிலக்கணத்தை எடுத்து நோக்குவோம். தொடர்களில் பெயருக்கும் வினைக்கும் உள்ள இலக்கண உறவுகளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை என்பதே இரண்டாவது விளக்கம்.

06 மனிதன் புலியைக் கொன்றான்

07. புலி மனிதனைக் கொன்றது.

இங்கு 06-ம் தொடரில் கொன்றான் என்ற வினைக்கு மனிதன் எழுவாய் உருவில் உறவு கொள்கிறான் அவ்வாறே 07-ம் தொடரில் கொன்றது என்ற வினைக்கு புலி எழுவாய் உருவில் உறவு கொள்கிறது. இவ்வாறே ஒரு தொடரில் அல்லது தொடரினில் உள்ள பெயர்கட்கும் தொடர்புடைய வினைக்கும் உள்ள உறவுகளே வேற்றுமை என்பதே விளக்கம்.

## உசாத்துணை

1. பேராசிரியர் ச. அகத்தியலிங்கனார் அவர்கள் வேற்றுமை பற்றிய ஏனைய விளக்கங்களோடு இதனையும் சேர்த்து வேற்றுமைக்கு விளக்கம் கூறுவார் (காண்க: இலக்கண உலகில் புதிய பார்வை. —டாக்டர் பொற்கோ. பக்கம் 100)
2. இலக்கண உலகில் புதிய பார்வை. டாக்டர் பொற்கோ 2-ம் பதிப்பு 1978 ஒப்புரவு அச்சகம் சென்னை பக்கம் 96
3. வேற்றுமையும் சொல்லொழுங்கும்—யோகேஸ்வரி கணேசலிங்கம் — 'சிந்தனை' சித்திரை 1976 பக்கம் 38.
4. வேற்றுமைப் பாகுபாடு — தமிழ் வரலாற்று இலக்கணம் — டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை மே 1979 2-ம் பதிப்பு. லீப்ஸிக் பிரிண்டர்ஸ் சென்னை.

## அறிவியல் பூஞ்சோலை

இதுவரை வேற்றுமை என்றால் என்ன என்பதை மேலெழுந்தவாரியாகப் பார்த்தநாம் வேற்றுமை பற்றி இலக்கண நூலோர்கள் சொல்லியவற்றை எடுத்து நோக்கினால் மட்டுமே வேற்றுமையின் உண்மை வடிவத்தைப் பிரயோகத்தை உணர்ந்து கொள்ளலாம் தமிழ் இலக்கணத்திற்கே மேல்வரிச் சட்டமாக அமைந்த தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில்உள்ள ஒன்பது இயல்களில் மூன்றில் வேற்றுமை இயல் வேற்றுமை மயங்கியல் விளிமரபு எனும் தலைப்புகளில் வேற்றுமை பற்றிப் பேசுவதைக் காணலாம். ஆனால் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டெழுந்த நன்னூல்

— பற்றிமாகரன் —

பெயரின் இறுதியிலேயே வேற்றுமை பற்றி இருபத்திஒன்பது சூத்திரங்களைக் கூறுகிறது.

இவ்வாறு தொல்காப்பியரும் நன்னூலாரும் வெவ்வேறு இடங்களில் வேற்றுமை பற்றி கூறியிருப்பது ஆய்வாளர்கள் இடை மாறுபட்ட ஆய்வுகளை தோற்றுவிக்கிறது.

''சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்பொழுதே வேற்றுமைப் பொருள் உண்டாகிறது. அதனால் வேற்றுமைபற்றிய ஆராய்ச்சி தொடர்மொழிக்கண் செய்யப்படும் ஆராய்ச்சியாகும். சொற்கள் வேற்றுமைப் பொருள் பெறுவதற்குக் காரணம் அவற்றைத் தொடரும் அண்மை நிலைகளே எனலாம். இந்த அண்மை நிலைகளின் விளக்கத்தைத் தனிச் சொற்களாலும் வாய்ப்பாடுகளாலும் தொல்காப்பியர் காட்டுகின்றாரெனலாம் என்பர். சீனிவாசன். தொல்காப்பியம் தொல்லதிகாரத்துள் வேற்றுமை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சொல்லிலக்கணத்தில் ஒன்பது இயல்கள் வகுத்த தொல்காப்பியம் வேற்றுமைக்கு மாத்திரம் மூன்று இயல்கள் ஒதுக்கியிருக்கிறது. [illegible] அமைப்பில் திணை பால் எண் இட[illegible]மல் வரவேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கிளவியாக்கம் என்ற முதலாவது இயலில் கூறிய தொல்காப்பியம் அடுத்து வரும் மூன்று இயல்களிலும் சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடரும்போது அவற்றின் தொடர்பைப் பல்வேறு விதமாக வேறுபடுத்தி வரும் வேற்றுமையை எடுத்துக் கூறுவர். வேற்றுமையியல் வேற்றுமைமயங்கியல் விள்மரபு என்பனவே அந்த இயல்கள். நன்னூலார் பெயரியலின் இறுதியிலேயே வேற்றுமை எடுத்துக்கூறுவர். வேற்றுமை கொள்வது பெயர்ச்சொல்லேயாதலின் நன்னூலார் இவ்வாறு கூறியிருக்கிறார் போலத் தெரிகிறது. ஆயின் எழுத்தியல் சொல்லியல் தொடரியல் என்று கொள்ளும்போது தொடரியலில் வேற்றுமை பெறும் முக்கியத்துவத்தை நன்னூலார் உணரவில்லைப்போலத் தெரியவருகிறது என்று தமிழ் வரலாற்று இலக்கணத்தில் டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை குறைம்சாட்டுவதைக் காணலாம்.

(தொடரும்)

பொருளியல்:

# பொருளியல்என்னும் சொல் உருவானது எப்படி?

தமிழ்ச்சொற்தொகுதியில் ''பொருளாதாரம்'' ''பொருளியல்'' என்பன சமீபகாலத்தில் இடம்பெற்ற சொற்கள். ஆனால் இச்சொற்கள் நாளாந்தப் பாவனையில். இன்று மிக அதிக அளவில் பயன்படுவது யாவரும் அறிந்ததே. ஒரு பொருளாதார மாணவன் இப் பொருளியல் எனும் சொல் உருவான விதத்தைத் தெரிந்து கொள்வது பொருளாதாரத்தைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

பொருளியல் அல்லது பொருளாதாரம் எனும் சொல் Economics எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமே. இச்சொல் ஆங்கிலத்துள்ளும் பண்டைக் கிரேக்க மொழியிலிருந்தே சென்றது என்பதே உண்மை. எனவே பொருளியலின் பிறந்தகம் கிரேக்கமென்பது தெளிவாகின்றது. ஆயினும் பிளாட்டோ (Plato) அரிஸ்டோட்டில் (Aristotle) போன்ற கிரேக்க அறிஞர்கள் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப அவர்களது அரசியல்நூல்களில் பக்கத்துணையாகத்தான்பொருளியல் சிந்தனைகளைக் கூறினார்களே தவிர பொருளியலைத் தனித்துறையாகவோ அல்லது இன்றைய நோக்குடனோ ஆராயவில்லை.

பொருளியலின் தந்தை எனும் கௌரவத்தைப் பெறுபவர் கி. பி. 1723 முதல் 1790 வரை வாழ்ந்து தொன்மைப் பொருளாதாரத்தை (Classical Economics) நிறுவிய ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஆடம்சிமித் (Adam smith) எனும் அறிஞரேயாவர். 1776ல் இவர் எழுதிய ''நாடுகளின் செல்வம்'' (An Enquiry in to the Nature and Causes of the Wealth of Economics) எனும் நூல்வெளிவந்த பின்பே பொருளியல் ஒரு இனங்காணக்கூடிய தனித்துறையாகப் பரிணமித்தது. இப்பொருளாதார வளர்ச்சியை முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் வேலெழுந்தவாரியாக என்கிலும் பார்ப்பதன் மூலமே 'பொருளியல்' பிறப்புற்று வளர்ப்புற்ற விதத்தை விளங்கிக்கொள்ளலாம். பிளாட்டோ குடியரசு The Republic) அரசியல்மேதை (The Statesman) சட்டங்கள் (The Laws) எனும் மூன்று முக்கிய நூல்களை எழுதி அரசியல்—பொருளாதார—சமூக சிந்தனைகளின் சிற்பியாகத் திகழ்கிறார், சம்பாஷணைப்பாணியில் அமைந்த இவரது நூல்களில் அரசின் தோற்றத்திற்கு பொருளாதாரம் மூலகாரணமெனக் கூறுகிறாரே தவிர பொருளாதாரத்தை வரையறை செய்யவில்லை. இவரது சீடரும் குருவைமிஞ்சிய மேதையுமாகிய அரிஸ்டாட்டில் Aristotle) தனது அரசியல் (Politics) ஒழுக்கஇயல் (Ethics) ஆகிய நூல்களில் பொருளாதார சிந்தனைகள் பரவலாக பரவிநிற்கின்றன. அரசின் தோற்றம் பற்றி அரிஸ்டாட்டில் தரும் விளக்கம் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டது. அரசு என்பது குடும்பம் கிராமம் ஆகியவற்றின் முழுவளர்ச்சியே என்று கூறிய அரிஸ்டாட்டில் குடும்ப பொருளாதாரம் பற்றி ஆய்வு செய்கிறார். குடும்ப பொருளாதாரத்தின் நான்காவது பகுதியாக ''நிதிதிரட்டும் கலை'' பற்றி ஆராயும் இவர் குடும்ப நிர்வாகத்தை ''இக்னோமியா'' (Oikonomia) எனும் கிரேக்க சொல்லால் குறிக்கிறார். இச்சொல்லே ஆங்கிலத்தில் (Economics) ஆக மருவிநின்று தமிழில் பொருளாதாரம் அல்லது பொருளியலாக மொழி பெயர்ப்புற்று வழங்கிவருகிறது.

(தொடரும்)

அரசியல் விஞ்ஞானம்:

# அரசு - அரசாங்கம் இருவேறு கருத்துக்கள்

அரசியல் விஞ்ஞானம் (Political Science) என்பது அரசியல் கோட்பாட்டியல் (Political Theory) அரசியல் தத்துவம் (Political Philosophy) எனும் இரு பெரும் பிரிவுகளை உள்ளடக்கி நிற்கிறது.

அரசியல் கோட்பாட்டியல் என்பது அரசியல் நூலாளர்களின் (Political Scientists) கொள்கை ஆய்வுகளை (Theoretical works) ஐக் குறிக்கும். அரசியல் தத்துவம் என்பது அரசியல் தத்துவஞானிகளின் கோட்பாட்டியல் செயலைக் குறிக்கும். அரசியல்கோட்பாட்டியல் அரசையும் அரசாங்கத்தையும் பற்றிய உண்மையான நிலை என்ன என்று ஆராய முனையும் அதேநேரம் அரசியல் தத்துவமோ அரசும் அரசாங்கமும் என்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைக் கற்பனையால் விளக்க முற்படுகின்றது.

ஆதிகாலம் முதலே மனிதன் தனியாக வாழவில்லை. ''தனியொருவனுக வாழ்வதென்றால் அவன் விலங்காகஇருக்கவேண்டும். அல்லது தெய்வமாக இருக்கவேண்டும்'' என்பது அரிஸ்டோட்டலின் கருத்து. (He who is unable to live in Society or who has no need because He is Sufficent for himself must be either a beast or God).

எனவே மனிதன் கூடிவாழ வேண்டும். அவ்வாறு மனிதன் கூடி வாழ்வதால் ஏற்படுகின்ற பலவிதமானதொடர்புகளையும் ஒழுங்குபடுத்தச் சட்டதிட்டங்கள் தேவை. இம்மனித நடத்தையை ஒழுங்கு படுத்தும் சட்டதிட்டங்களை இயற்றவும் அமுலாக்கவும் ஒரு அமைப்புத் தேவை. இந்த அமைப்பை அரசாங்கம் என்போமானால் அரசாங்கத்தைப் பெற்ற ஒரு சமூகத்தை அரசு எனலாம். எனவே அரசாங்கம் அரசின் ஒரு முக்கிய கூறே தவிர அரசும் அரசாங்கமும் ஒருபொருள் சொற்களல்ல. இதனை உணராது அரசு அரசாங்கம் என்பவற்றை ஒரே கருத்துடைய சொற்களைப்போல் பிரயோகிப்பதுகவலைக்குரியவிடயம். ''அரசுக்கு எதிரான அல்லது ஆதரவானசெயல்'' எனப் பத்திரிகள் அடிக்கடி செய்திகள் எழுதுகின்றன. உண்மையில் அவ்விடத்தில் அரசு எனும் சொல்லுக்குப் பதிலாக அரசாங்கம் எனும் சொல்லே பயன்படுத்தப்படல் வேண்டும்.

(தொடரும்)

## மயான மடம் திருத்த வேலை

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது பழுதடைத்த நிலையிலிருக்கும் நவாலி ஆரியம்பிட்டி மயானத்திலுள்ள மடத்தை திருத்தியமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து பன்னீராயிரம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இவ்வேலையை நவாலி கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுச் செய்கிறது. இந்த வேலைக்கான ஆரம்ப விழா கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சி. ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றபோது யாழ். மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி திரு. ந. சரவணபவானந்தன் இதற்கான அத்திபாரக் கல்லை நாட்டிவைத்தார். (கு)

## கவனிப்பாரற்ற 20 வீடுகள்

(புளியங்குளம்)

காணி அபிவிருத்தித் திணைக்களத்தினால் கட்டப்பட்டு பின்னர் மாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட சுமார் 20 வீடுகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

இக் கட்டிடத்தின் கதவு, யன்னல் ஓடுகள் முதலியன மக்களால் உடைத்து எடுக்கப்பட்டு வருகின்றது. இன்றைய அரசு தொகுதிக்கு 20 வீடுகள் கட்டிக் கொடுப்பது போன்று இவ்வாறான பழைய வீடுகளையும் திருத்திப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யலாம் என பேசப்படுகிறது.

(ச)

## புனரமைப்பு

(அரியாலை)

பாஷையூர் புனிதஅந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட மைதானம் சிறந்த முறையில் புனரமைக்கப்படுகிறது.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் இந்த மைதானத்தைப் புனரமைப்பு செய்ய முப்பதினாயிரம் ரூபா வழங்கியிருந்தார்.

இந்த மைதானம் பாவனைக்கு வந்தபின்னர் யாழ்ப்பாணத்தொகுதியில் உதைபந்தாட்டத்திற்குச் சிறந்தமைதானம் இல்லாத நீண்ட காலக் குறை நீங்கிவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட அபிவிருத்திச்சபை மூலம்தந்தை கேட்ட யாவற்றையும் தந்துவிட்டார்கள் என்று கூறி மக்களைக் குழப்புகின்றவர்கள், இன்று உண்மை பேசும் எங்களைப் பார்த்துக் குழப்புகின்றார்கள்'' என்று கூறினார்.

திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை பேசும் பொழுது, அமரர் வன்னியசிங்கம் இருந்திருப்பாரானால் தந்தைக்கு அடுத்தபடி தலைவராக இருந்திருப்பார் என்றார்.

முன்னாள் மேயர் திரு. சு. வே. மகாதேவா, கிளிநொச்சி முன்னாள் பட்டணசபைத் தலைவர் திரு. முருகேசு, யாழ். வளாக மாணவன் திரு. வரதராஜா, சட்டக்கல்லூரி மாணவன் திரு. பூலோகசிங்கம், திரு. நவரத்தினம், திரு. இளையதம்பி ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈராக்கின் பொருளாதார நிலையங்கள் மீது ஈரான் பீரங்கித் தாக்குதல்!

## இது நீடித்தால் படையெடுப்பு நடக்கும் என ஈராக் எச்சரிக்கை

பாக்தாத், செப். 21

ஈராக்கின் எல்லைப்புறத்தி லுள்ள பொருளாதார முக்கி யத்துவம் வாய்ந்த இடங்களில் ஈரான் நேற்றிரவு திடீர் பீரங் கித் தாக்குதல் நடாத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் நடத்தப்பட்டால் ஈரானின் எந்தப்பகுதிக்குள் ளும் பிரவேசித்து தாக்குதல் நடத்த ஈராக் தயங்காது என்று பாதுகாப்பு அமைச் சின் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

ஈரான்—ஈராக் எல்லையில் கடந்த சில நாட்களாக இடம் பெற்றுவரும் சண்டைகள் தொடர்ந்து சிறிய அளவில் நடைபெற்று வருகின்றன. நேற்றிரவு திடீரென ஈராக் கினுள் பிரவேசித்த ஈரான் துருப்புக்கள் அங்குள்ள பொரு ளாதார நிலையங்கள்மீது பீரங் கித்தாக்குதலை நடாத்தின. இதனால் பெருந்தொகையான பொருட்சேதம் ஏற்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் சண்டை இடம்பெற்றுவரும் இடத்தை நேற்று சென்று பார்வையிட்ட ஈரானிய ஜனாதிபதி பாணிசத் தர், ஈரானின் சிறிதளவு நில த்தை ஈராக் கைப்பற்றியுள் ளதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்ததுடன் எப்படியும் அந்த நிலத்தை மீண்டும் கைப்பற்றியே தீருவோம் என்று கூறியுள்ளார். (கு)

## இந்தியாவில் வெள்ள அபாயம்: ஒரிஸாவில் 200 பேர் பலி!

### மீட்புப் பணிகளில் ராணுவத்தினர்

புதுடில்லி, செப். 21

ஒரிஸா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடும் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட நகரங்களில் இந்திய ராணுவ வீரர்கள் மிகத்துரித மீட்புப்பணியில் ஈடுபட்டுவரு வருகின்றனர்.

ஒரிஸாவில் மகாநதி பெரு க்கெடுத்ததால் சில கிராமங் கள் முற்ருக அடித்துச் செல் லப்பட்டுவிட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இதுவரை 200 பேர் மாண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

வானிலை நேற்று சீராக இருக் காததால் விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள், மரு ந்துகள் என்பவற்றைப் போட முடியாமல் போனதால் ராணுவ வீரர்கள் படகுகளில் சென்று அவற்றை விநியோ கித்து வருகின்றனர்.

ஆந்திரப் பிரதேசத்திலும் இதுவரை வெள்ளப்பெருக் கினால் 15 பேர் பலியாகியுள்ள னர். அங்கு கடற்படை வீரர் கள் மீட்புப்பணியில் ஈடுபட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

ஒரிஸாவில் பிரதான மின் விநியோக நிலையத்தில் வெள் ளத்தினால் ஏற்பட்ட கோளா றினால் 10 மாவட்டங்கள் இரு ளில் காணப்பட்டன. (கு)

## அஸாம் பிரச்னை: பேச்சுக்களில் முன்னேற்றம்

புதுடில்லி, செப். 21

அஸாம் பிரச்னை தொடர் பாக உள்துறை அமைச்சர் திரு. ஜேம்சிங்குப், அனைத்து அஸாம் மாணவர் சங்கத் தலை வர்களும் நேற்று நான்காவது தடவையாகப் பேச்சுவார் த்தை நடாத்தினர்.

அஸாமிலுள்ள வெளிநாட்ட வர்களை எவ்வாறு கண்டறி வது என்பது குறித்து இருதர ப்பினருக்குமிடையே விரை வில் இணக்கம் காணப்பட லாம் என்று நம்பப்படுகிறது. (கு)

# ரஜீவ் காந்தி அரசியலில் பிரவேசிக்கமாட்டார்!

## இந்திய அரசியலில் நேர்மையானவர்கள் இல்லையாம்

புதுடில்லி, செப். 21

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மூத்த புத ல்வர் திரு. ரஜீவ் காந்தி தாம் அரசியலில் பிரவேசிக்கப்போவ தில்லை என்று தெரிவித்துள் ளார்.

இந்திய அரசியலில் நேர்மை யானவர்கள் இல்லையானலும் திறமையாளவர்கள் பலர் இரு ப்பதால் தமது தாயாருக்குத் துணையாக தான் அரசியலில் பிரவேசிக்கத் தேவையில்லை என்றும் திரு. ரஜீவ் காந்தி கூறினர்.

திருமதி காந்திக்கு அரசிய லில் பக்கபலமாக இருந்து வந்த அவரது இளைய புதல்வர் திரு. சஞ்சய் காந்தி அகால மரணமடைந்த பின்னர் அவ ருக்குத் துணையாக அரசியலில் பிரவேசிக்குமாறு திரு. ரஜீவ் காந்தியை அரசியல் தலைவர் களும் பொதுமக்களும் வற்புறு த்தி வருகின்றனர்.

36 வயதான திரு. ரஜீவ் காந்தி இந்திய விமானசேவை நிலையத்தில் விமானியாகப் பணிபுரிபவர். சில தினங் களில் தனது இறுதித் தீர்மான த்தை வெளியிடப்போவதாக தெரிவித்துள்ள திரு. ரஜீவ், அடுத்தவாரம் ஜெட்விமானங் களை ஓட்டுவதற்கான பயிற்சி யில் ஈடுபடவுள்ளதாகவும் தெரி வித்தார். (கு)

## வெங்கட்ராமன் காலமானர்

சென்னை, செப். 21

இந்திய விடுதலை வீரரும் ராஷ்ய சபாவின் முன்னள் உறுப்பினருமான திரு. எஸ். வெங்கட்ராமன் நேற்று முன் தினம் மாரடைப்பால் கால மானர். அவருக்கு 78 வயது.


யப்பான் நாட்டிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்டு, வடபகுதி விவசாய நண்பர்களின்

உற்ற தோழனுகத் திகழ்வது "இசுக்கி" உழவுயந்திரம்!!

எமது காட்சிச்சாலையில் பார்வையிட்டு
கொள்முதல் செய்யலாம்! இலாபகரமானது!!

குறைந்த எரிபொருள்; அதிக சக்திகொண்டது;
இலகுவான கிளச் அமைப்பு;
சரிப்படுத்தும் கைப்பிடி; சுழலும் மண்வெட்டி;
டீசல் என்ஜின்; அதிகபாரம் ஏற்றலாம்
தகுதிகாண் பொருட்களை நாடுவோர்
"இசுக்கி"யையே விரும்புவர்!
இவை மட்டுமா?
எதுவேண்டுமோ அத்தனையும் கிடைக்கிறது எம்மிடம்!!




விவசாயிகளின் தேவைகளுக்கு:-

நீரிறைக்கும் யந்திரம், இரண்டுசில்லு உழவு இயந்திரம், தெளிகருவிகள், உப உறுப்புக்கள், அல்கத்தீன் குழாய்கள், கிருமி நாசினிகள், விவசாய உபகரணங்கள், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக் கான உரக்கலவைகள்.

உப உணவுப் பொருட்கள்:-

பூடு, மிளகு, கிலிம் பாலுணவு, நெஸ்டம், ஓவல்ரின், வெஸ்பாக் டின் மீன்.

பாவனைப் பொருட்கள்: கோல்மன் பெற்றோமாக்ஸ், கால்நடைகளுக்கு: உணவுத்தின் வகைகள், சகல மருந்துவகைகள்

ப. நோ. கூ. சங்கங்களுக்கு சலுகை வசதியுண்டு

வர்த்தக விசாரணைகள்:

ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம் (ம. ப.)

Sri Lanka Co-op Marketing Federation Ltd.

112, பிரதான வீதி, (போன் 504) யாழ்ப்பாணம்.

தலைமையகம் [illegible], 127, கிருன்பாஸ் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
தெய்வத்தின் தெய்வம்
24-ந் திகதி முதல்
THE DEEP

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-45
Foul Play

WINDSOR (JAFFNA)
IT'S EVIL...... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a. m. 2-00, 4 30, & 7-00 p m only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
in
"I DONT WANT TO BE BORN"
Color - Adults only

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
75—வது வெற்றித் திருநாளை நோக்கி
நீயா?
கமல், லதா, ஸ்ரீபிரியா, மஞ்சுளா, விஜயகுமார், நம்பியார், சுருளி
இசை: சங்கர் — கணேஷ்
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

ராணி - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்பிரியா
சட்டம் என் கையில்

இன்று மட்டும்
ஸ்ரீதர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இரு வேடங்களில்) மஞ்சுளா
எங்கள் தங்க ராஜா (கலர்)
24-ந் திகதி முதல்
பைலட் பிரேம்நாத்
விரைவில்
எம். ஜி. ஆர். - லதா நடித்த
மீனவ நண்பன்

## ஆங்கில நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"சநாதன" இந்து கலாச்சாரமும் இருகற்பனைக் கதைகளும்" என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழா இம் மாதம் 24ம் திகதி புதன்கிழமை மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி கா. இந்திரபாலா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கலாநிதி ஜேம்ஸ் ரி. இரத்தினம், திரு. என். சபாரத்தினம் உட்படப் பலர் ஆய்வுரை நிகழ்த்துவர். நூலாசிரியர் மு. வைத்தியலிங்கம் பதிலுரையாற்றுவார். (சு)

## யாழ். கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் ஹொக்கித் தெரிவுக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணப் பகுதி ஹொக்கிக்கோஷ்டிக்கு இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான ஹொக்கிப் போட்டியில் யாழ்ப்பாணப் பகுதி ஹொக்கிக் கோஷ்டி 3:2 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ். பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (ச)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கைகொடுத்த தெய்வம்

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த
ராமன்தேடியசீதை

நாகம்மாஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
எம் ஜி ஆர் - சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்
(புதிய பிரதி)

அ. இ. பா. ஹொக்கிப் போட்டி:

## மேல்மாகாணக் கோஷ்டி வெற்றி

(அரியாலை)

அகில இலங்கைப் பாடசாலைகளின் ஹொக்கி பந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் குருத்தலாவ சென்ற். தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாகாணங்களுக்கான ஹொக்கி இறுதிப்போட்டியில் வடமாகாணக் கல்லூரிகளின் ஹொக்கிக் கோஷ்டி தோல்வியடைந்தது.

வடமாகாணக்கல்லூரிகளின் ஹொக்கி கோஷ்டிக்கும், மத்திய மாகாணக் கல்லூரிகளின் ஹொக்கிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது சுற்றுப்போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 1:1 கோல்களைப் போட்டுச் சமனிக் கொண்டன.

இரண்டாவது சுற்றுப்போட்டியில் மேல்மாகாணக்கல்லூரிகளின் ஹொக்கி மஞ்சள் கோஷ்டிக்கும், வடமாகாணக் கல்லூரிகளின் ஹொக்கிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்றபோட்டியில் மேல் மாகாணக் கோஷ்டி 4:0 கோல்களைப்போட்டு வெற்றியீட்டியது. வடமாகாணக் கல்லூரிகளின் ஹொக்கிக் கோஷ்டிக்கு செல்வன்கள் என். வசந்தன், முரளிதரன் ஆகிய இருவரும் தலைமை வகித்தனர். (ஈ)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 6-ந்திகதி
(திங்கட்கிழமை)
(22 - 9 - 1980)

மேடம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதரவழியில் சஞ்சலத்துக்கும் இடமுண்டு இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு மௌனம் நன்று.

இடபம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும் வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவுக்கும் இடமுண்டு விளைபொருள் விருத்தியும் வியாபார முன்னேற்றமும் எற்படும்.

மிதுனம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் நல்ல நாள் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு பிள்ளை யொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

கடகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் இன்று அதிக பேச்சைத்தவிர்த்துக் கொள்ளவும் அரசியல் வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளவும் வரவிலும் தடையுண்டு.

சிங்கம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும் நீண்டநாள் அபிலாசை இன்று நிறைவேறும் உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன்வருவார்கள்.

கன்னி: தொழில்துறையில் போட்ட போட்டிகள் தலைதூக்கும் முன்னேறுவதற்கான சந்தர்பமொன்று கைநழுவிப் போகலாம் உறவாடிக் கெடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் துயர்படிந்த தினம்.

துலாம்: விளையாட்டுப் பிள்ளையாக இருக்க விரும்புவீர் உமது சித்திரப்போக்கு மற்றவர்களுக்கு வேடிக்கையைத்தரலாம் சமயோசித புத்தி நன்மையைத் தரும் இன்று நீர் கவலை இல்லாத மனிதன்.

விருட்சம்: முயற்சியால் உயர்ச்சி உண்டு பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் ஏற்படும் வெளியிடத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும் வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும் சுகபோக நாள்.

தனு: உடல் நலத்தில் அபிவிருத்தி தென்படும் குடும்பத்தில் சுபகருமங்களும் இடம் பெறும் பயன் தரக்கூடிய உடன்படிக்கை யொன்று இன்று கைச்சாத்திடப்படலாம் கண்ணியமான தினம்.

மகரம்: வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும் தானிய நஸ்டத்துக்கு இடமுண்டு வியாபரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்: அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும் அடக்கமாக இருக்கவும்.

மீனம்: பெரிய இடத்துச் சினேகம் இன்று ஏற்படலாம் சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
க. வேலுப்பிள்ளை

## "தந்தை செல்வா எடுத்த முடிவு"

(சித்தன்கேணி)

"தந்தை செல்வா ஸ்ரீலங்கா சுதந்திரச்கட்சியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதுடன் ஒப்பந்தங்களும் செய்து தோல்வியடைந்தபின்பு நன்றாகச் சிந்தித்து எடுத்த முடிவே தமிழ் ஈழம் ஆகும். இம்முடிவை எடுத்த பின்பு தந்தை செல்வா சிங்கள அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையிலோ ஒப்பந்தத்திலோ சிறிதளவு கூடக் கவனம் எடுக்கவில்லை".

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரால் கழக நிலையத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் திரு. ஈழவேர்தன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கருத்தரங்கில் கோவை மகேசன், திரு. ப. இறைகுமாரன், திரு. இராசநாயகம் ஆகியோரும் பேசினர்கள். (க)

## மக்கள் பாதிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபைக்கு விசேஷ ஆணையாளர் நியமிக்கப்படாததனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (கு)

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் மு. கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் அருமையான சண்டைக் காட்சி.
அருமையான பாடல்களுடன் குழுகுழு கலரில் உருவான ஒப்பற்ற திரைக் காவியம்.

ஜெய்சங்கர், ஜெயசித்திரா, அசோகன், எம். ஆர். ராதா, எஸ். வி. சுப்பையா நடிக்கும்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, & 9-45
SEAN CONNERY, RICHAR BURTON in
SHALAKO
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த, துலக்கமான
"போட்டோ ஸ்ரட்"
பிரதிகளுக்கும்
புகைப்பட சாதனங்களுக்கும்,
பாரத் சென்ரர்,
178, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
போன்: 8265
சிறந்த புகைப்படங்களுக்கு
பாரத் ஸ்ரூடியோ

ஈழநாடு 50 சதம்
EELANAADU

## 2 கோடிபேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களுக்குஅப்புறப் படுத்தப்படுகின்றனர். அணைக்கட்டில் உடைப்பு ஏற்பட்டால், அழிவு பயங்கரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இந்திய விமானப்படை ஹெலிகாப்டர்கள், உணவுப் பொட்டலங்களை வழங்கி வருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க இந்தியாவின் மற்றுமொரு மாநிலமான ராஜஸ்தானில் கடும் வரட்சி நிலவுகிறது. பல மாவட்டங்களில் பஞ்சம் நிலவுவதாக செய்திகள் தெரிவித்தன.

7 ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞானம்
வினு-விடை
தாவர விலங்குகளைப் பாகுபடுத்தும் இருகிளைத் திறவுகோள் முறை உட்பட விளக்கக் குறிப்புகளும் உள்ளன.
ஆலோசனை செ. வேலாயுதபிள்ளை
விலை 3-25 B.A; Sc. Trd.
காந்தளகம்
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## ஒப்புதல் வாக்குமூலம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவருகின்றது. 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகியிருந்தனர்.

தொடர்ந்து குறுக்குவிசாரணைசெய்யப்பட்ட சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி கூறியதாவது:

சட்: 4-3-80 அன்று மனோகரனின் வாக்குமூலம் எடுக்கப்பட்டது?- ஆம்.

சட்: எத்தனைதடவை எடுக்கப்பட்டது?- மூன்று தடவைகள். முதலாவது வாக்குமூலம் 4-3-80லும், இரண்டாவது வாக்குமூலம் 12-3-80லும் எடுக்கப்பட்டது.

சட்: குற்றவியல் சட்டக்கோவை 115 (4)ம் பிரிவின்படி இரு எதிரிகளின் வாக்குமூலங்களைப் பதிய 1-3-80ல் மன்றுக்கு விண்ணப்பித்தீர்கள்?- ஆம்.

சட்: அதனை உங்கள் பெயரில் விண்ணப்பம்செய்தீர்கள்?- ஆம்.

சட்: உங்கள் பெயரில் அப்படி விண்ணப்பிக்க அதிகாரமில்லை?- அதிகாரமிருக்கிறது.

சட்: 2வது தடவையாக எப்போ விண்ணப்பித்தீர்கள்?- 7-4-80ல்.

சட்: அவ்விண்ணப்பத்திற்கு மன்றின் அனுமதி கிடைத்ததா?- கிடைத்தது.

சட்: எப்போ கிடைத்தது?- 8ம் திகதி.

சட்: அந்த அனுமதிக்கேற்ப யாழ் சிறைச்சாலைக்கு எப்போ போனீர்கள்?- 10ம் திகதி 1ம் எதிரியை பருத்தித்துறைக்கு கூட்டிவந்து விசாரித்தோம்.

சட்: உங்களுடன் எத்தனை பேர் வந்தார்கள்?- 1ம் எதிரியும் இரண்டு பொலிஸ்கான்ஸ்டபிள்களும், ஒரு ஜெயிலரும் வந்தார்கள்.

சட்: யார் அவர்கள்?- பொலிஸ் கான்ஸ்டபிள்களான 7851, 7901, ஜெயிலர் பசுபதி 'காட்' இலங்கைநாயகம் ஆகியோர்.

சட்: பொலிஸ் கான்ஸ்டபிள்களை உங்களுடன் அழைத்துச் செல்ல அனுமதி எடுத்தீர்களா?- இல்லை.

சட்:- பொலிஸ்கான்ஸ்டபிள்கள் றைபிள்களுடன் வந்தார்களா?- ஆம், ஆனால் என் கையில் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை.

சட்: வாடி வீட்டிற்கு எத்தனை மணிக்குச் சென்றீர்கள்? 4-50 மணிக்கு.

சட்: :- அங்கு 1ம் எதிரியின் வாக்கு மூலத்தை எடுத்தீர்?- ஆம். அன்று பி. ப. 2-50 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையம் வந்து அங்கிருந்து தெற்குப்பக்கமாக கிராமக் கோட்டிற்குச் சென்று, அங்கிருந்து ஆனைவிழுந்தான் சந்திக்குச் சென்றோம். பின்னர் வலது பக்கமாக வல்லிபுரக்கோவில் நோக்கி 75 யார் தூரம் நடந்து சென்று, பின் கிழக்குப்பக்கமாகச் செல்லும் சுடலை ஒழுங்கையில் 50யார் தூரம் நடந்து சென்று இடப் பக்கமாக மணல் காட்டிற்குள் இறங்கி சுமார் 800 அடி தூரம் நடந்து சென்று பிரேதம் கிடந்த இடத்தை அடைந்தோம். அங்கு அளவுகளை எடுத்துக் கொண்டு மீண்டும் ஆனைவிழுந்தான் சந்திக்கு வந்து ஜீப்பில்ஏறி வடக்குப் பக்கமாக அதே றோட்டால் முனைக்குச் சென்றோம். அங்கு 1ம் எதிரியின் வீட்டு ஒழுங்கையால் நடந்து சென்றோம். மீண்டும் திரும்பி வந்து ஜீப்பில் ஏறி, கடற்கரை றோட்டால் வாடி வீட்டுக்குச் சென்று 1ம் எதிரிக்கு தேநீர் வாங்கிக் கொடுத்தோம். பின்னர் வாடி வீட்டிற்கருகில் வைத்து 1ம் எதிரியின் வாக்கு மூலத்தை நான் பதிந்தேன். குறிப்பிட்ட இடங்களைக்கூறி நான் கேட்டகேள்விகளுக்கு 1ம் எதிரியால் அளிக்கப்பட்ட பதில்களே இவ் வாக்குமூலமாகும். வாடிவீட்டிற்குவரும் வரை என்னுடன் ஜெயிலரும், 2 பொலிஸ்கான்ஸ்டபிள்களும் கூடவே காணப்பட்டனர்.

நீதிவான்:- 3-4-80 யாழ். சிறைச்சாலையில்வைத்து 1-ம் எதிரியிடம் வாக்கு மூலமெடுத்தபோது பக்கத்தில் 2ம் எதிரியும் நின்றாரா?- இல்லை.

நீதவான்: அப்போது 1ம் எதிரி அளித்த வாக்குமூலம் குற்றஒப்புதல் வாக்குமூலம் என்று தெரியாதா?- எழுதி முடிந்தபின் குற்றஒப்புதல் வாக்குமூலமென்பது தெரியும்.

நீதவான்: நீங்கள் 1ம் எதிரியிடம் வாக்குமூலம் எடுக்கு முன், அவரையே (1ம் எதிரி) குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வாக்குமூலம் எடுத்துவருமாறு பருத்தித்துறை நீதவான் அனுமதியளித்ததாக அவருக்குச் சொன்னீர்களா?- இல்லை.

நீத: உதவிபொலிஸ் சுப்பிரிண்டன் நிசாம் சொன்னாரா?- சொன்னாரா? இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

நீத: அன்றையதினமே பிற்பகல் 2-30 மணிக்கு 2ம் எதிரியின் வாக்குமூலம் எடுத்தீரா?- ஆம்.

நீத: 2ம் எதிரி அளித்த வாக்குமூலம் கொலைக்குற்றம் செய்யவில்லையென மறுப்பதான வாக்குமூலம்?- ஆம்.

நீத: 7-4-80ல் மன்றுக்கு அனுத்த 2வது விண்ணப்பத்திலே 3-4-80ல் 1ம், 2ம் எதிரிகள் சிறையில் அளித்த வாய்முறைப்பாடுகளை வாக்குமூலம் என்றுதான் குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த வாய்முறைப்பாடுகளில் ஒன்று அதாவது 1ம் எதிரியின் வாய்முறைப்பாடு குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வாக்குமூலம் என்றும் மற்றொன்று அதாவது 2ம் எதிரியின் வாய்முறைப்பாடு குற்றத்தை மறுக்கும் வாக்குமூலமென்றும் வித்தியாசப்படுத்திக் காட்டும்வகையிலே, அவ்விண்ணப்பத்திலே ஏதாவது தெரிவித்திருக்கிறீர்களா?- இல்லை.

நீத: 3-4-80ல் 1ம் எதிரியின் வாக்குமூலத்தைப்பதிந்தபிறகு அடிக்குறிப்பாக இவ் வாக்குமூலத்தைக் கொடுப்பதற்கு எனக்குப் பயமுறுத்தலோ, ஊக்குவித்தலோ பொருத்தமோ சொல்லப்படவில்லையென்றும் 1ம் எதிரி கூறியதாகத் தெரிவித்துள்ளீர்கள். அதன்கருத்து 1ம் எதிரியின் வாக்குமூலம் எடுத்தபிறகாவது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அது இக் கொலைக் குற்றத்தை 1ம் எதிரி மாத்திரமே செய்ததாக ஒப்புக்கொள்கின்ற வாக்குமூலம் என்று?- ஆம்.

நீத:- அப்படித் தெரிந்த பிறகு எப்போதாவது 3-4-80 இல் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எடுத்ததாக மன்றுக்கு அறிவித்தீர்களா?- நான் அறிவிக்கவில்லை.

நீத:- வேறுயாராவது மன்றுக்கு அறிவித்தார்களா?- அதாவது அத்தாட்சிப் பத்திரப் பிரதிகளை 3-6-80 ல் கொடுக்கும்வரைக்கு 1ம் எதிரியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எடுத்த இரகசியத்தை மன்றுக்கு ஏன் அறிவிக்கவில்லை?- நான் இவ்வழக்கில் புலன்விசாரணை நடத்திய அதிகாரியே தவிர பொலிஸ்நிலைய நிர்வாக அதிகாரி அல்ல. இதனால் இவ்விடயங்கள் எனக்குத் தெரியாது.

நீத:- நீங்கள் 1ம் எதிரியிடம் குற்ற ஒப்புதல்வாக்குமூலம் எடுக்கமுன்பு அதனை எடுக்கப்போகும் உண்மையை மன்றுக்கு வேண்டுமென்றே மறைத்ததும் அல்லாமல் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எடுத்த பிறகுஅத்தாட்சிபடுத்தப்பட்ட பிரதிகளை 3-6-80 ல் எடுக்கும் வரைக்கும் பிடிகொடுக்காத முறையிலே மூடிமறைத்துள்ளீர்கள்?- நான் அதைமறைக்கவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### குமாரசுவாமி பரமேஸ்வரி

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை குமாரசுவாமியின் அன்பு மனைவியும், விநோதன் [சட்டத்தரணி], உத்தமி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஐயாத்துரை சிதம்பரத்தின் மருமகளும், இளைப்பாறிய ரீமேக்கர் முத்துசாமி பாலசிங்கத்தின் சகோதரியும் ஆகிய குமாரசுவாமி பரமேஸ்வரி காலமானார். ஈமைக்கிரியை சங்கம்புலவு மயானத்தில் இன்று [22-9-80] மாலை 4 மணிக்கு நடைபெறும்.

உறவினரும், நண்பர்களும், இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அறிவிப்பவர்:
கு. விநோதன்,
[சட்டத்தரணி]

6902

## மரண அறிவித்தல்

### மு. க. சுப்பிரமணியம்

ஆசிரியர் சங்கப் பிரமுகரும், இலங்கை வசதிகள் சேவைகள் ஆசிரியர் சங்கப் போஷகரும், சுன்னாகம் சக்தி அச்சகப் பங்காளரும், முன்னைநாள் குரும்பசிட்டி பொன். பரமானந்த வித்தியாலய அதிபரும், பிரபல சமூக சேவையாளரும், இளைப்பாறிய ஆசிரியை திருமதி சுப்பிரமணியம் செல்வரத்தினம் [நவநிதி] அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற செ. லோகதாசன் அவர்களின் மனைவி கலாநிதி, சென், தோமஸ் கல்லூரி, பண்டாரவளை, ஆசிரியர் திரு. சு. சிவகுமாரன், சுதேச வைத்தியக் கல்லூரி மாணவன் சு.சிவராசன், நுண்கலைக் கல்லூரி மாணவி தயாநிதி, மகாஜனக்கல்லூரி மாணவி பதுமநிதி, அவர்களின் தந்தையும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவி சி. ஜெபவானி அவர்களின் மாமனும், ஜெயநிதி, ஜெயரூபன், ஜெயவதனி, சிவஜனனி, சஞ்சீவன், ஆகியோரின் பேரனுமாகிய திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்கள் 21-9-80 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் குரும்பசிட்டியில் நடைபெற்றது.

6904

## பிரயாணியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியபோது, குறிப்பிட்ட பஸ் சண்டிலிப்பாய்க்குத்தான் செல்கிறது என்றும், ஆனல் யாழ்ப்பாணம்வரை டிக்கட் எடுத்து பின்னர், அங்கிருந்து சண்டிலிப்பாய்க்கு டிக்கட் எடுக்க வேண்டும் என்று கூறினராம். பஸ், யாழ். பஸ் நிலையம் வந்து புறப்படும்போது, குறிப்பிட்ட பிரயாணி பஸ்ஸுக்குள் இருந்து கொண்டே பஸ் நடத்துநரிடம் டிக்கட் கேட்டபோது கீழே இறங்கி டிக்கட் பெற்றுக் கொள்ளுமாறு நடத்துநர் கூறியதாகவும், பிரயாணிதாம் திருநெல்வேலியிலிருந்து இந்த பஸ்ஸில் வருவதாகவும் சண்டிலிப்பாய்க்குச் செல்ல டிக்கட் தருமாறும் கூறவே, நடத்துநர் மறுத்ததாகவும், இதனைத் தொடர்ந்து பஸ் நடத்துநர் பிரயாணியை தகாத வார்த்தைகளால் ஏசி மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது. இச் சம்பவம் குறித்து விசாரணைநடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பஸ் பிரயாணி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியை என்று தெரியவருகிறது.

## லிகிதர்கள் நியமனம்

(புளியங்குளம்)

முல்லைத்தீவு கூட்டுறவு உதவி ஆணையாளர் திணைக்களத்தில் நான்கு சிங்கள லிகிதர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## பயிற்சி

றேடியோ-ரெலிவிசன் ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன். உடன் நேரில் வரவும். [illegible] ஸ்தாபனம் [illegible] யாழ்ப்பாணம். 6905

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிடெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ● உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
● அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ● பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GE 8948/78 The Eelanaadu P. B. No. 40, Telegram Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org